**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத்துறை**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**நீலகிரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(18.05.2022 முதல் 22.05.2022)**

**அறிக்கை எண் 39/2022** **தேதி 17.05.2022**

---

## நீலகிரி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17-21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10-12°செ ஆகவும், நீலகிரியில் மிதமான மழை பெறப்பட்டது.

## நீலகிரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (13.05.2022 முதல் 16.05.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 22.05.2022 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/05 | 14/05 | 15/05 | 16/05 | தேதி | நாள்-1 18/05 | நாள்-2 19/05 | நாள்-3 20/05 | நாள்-4 21/05 | நாள்-5 22/05 |
| 10.6 | 0.1 | 26.9 | 12.9 | மழை (மி.மீ) | 45 | 25 | 8 | 8 | 12 |
| 17 | 17 | 21 | 20 | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | 18 | 18 | 20 | 20 | 21 |
| 10 | 11 | 12 | 12 | குறைந்தபட்ச வெப்ப நிலை (°செ) | 11 | 13 | 13 | 14 | 14 |
| 8 | 7 | 8 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 100-84 | 79-89 | 88-90 | 92-90 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85-75 | 85-75 | 85-75 | 85-75 | 85-75 |
| 9 | 2 | 0 | 4 | காற்றின் வேகம் (கி.மீ / மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |

## எதிர்பார்க்கப்படும் வானிலை நீலகிரி (18.05.2022 முதல் 22.05.2022)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்கள் மிதமான மழை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.. அதிகபட்ச வெப்பநிலை 18-21°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 11-14°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| பொதுவான | | வரும் வாரத்தில் வரக்கூடிய மழையை பயன்படுத்தி, உருளை கிழங்கு பயிரில் விதைப்பின் போதும் 30ஆம் நாளிழிழும் ஏக்கருக்கு, 50 கிலோ யூரியா, 266 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ பொட்டாஸ் உரம் இடுவீர். |
| ப்ரகோலி மற்றும் காளிப்ளவர் | வளர் பருவம் | ப்ரகோலி மற்றும் காளிப்ளவர் பயிரில், தலைப்பகுதியில் வெற்றிடம் உண்டாதல் மற்றும் நிறம் மாறுதல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த, போரக்ஸ் நுண்ணூட்டசத்தை ஒரு ஏக்கருக்கு 1000 கிராம், ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| உருளை கிழங்கு | | உருளை கிழங்கில் வெப்ப நிலை மாற்றம் காரணமாக, சாம்பல் நோயை கட்டுப்படுத்த சைமோமாக்சில் 8% + மாங்கோசெப் 64 % சதவீத மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து தெளிக்கவும். |
| மலைப்பயிர்கள் | வளர் பருவம் | மரவகைப் பயிர்களை நடவு செய்ய இது உரிய தருணமாகும். நடவின் போது, கண்றுக்கு 50 கிராம் வேர் உட்பூசணம் இட்டு நடவு செய்யவும். |

**குறுஞ்செய்தி**

வரும் வாரத்தில் வரக்கூடிய மழையை பயன்படுத்தி, உருளை கிழங்கு பயிரில் விதைப்பின் போதும் 30ஆம் நாளிழிழும் ஏக்கருக்கு, 50 கிலோ யூரியா, 266 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ பொட்டாஸ் உரம் இடுவீர்.

**ஒருங்கிணைப்பாளர் & பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், த.நா.வே.ப.கழகம், உதகை.**